# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.....

XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 104

**S.C. No: 39/2021**

| | | |
|---|---|---|
| Ranking of Witness | .. | PW -11 |
| Name | .. | Sekar |
| Father Name | .. | |
| Village | .. | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th November -2022 .

---

முதல் விசாரணை

**நான் திருச்சி, பீமநகரில் பூ வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் இவ்வழக்கு சம்பவத்தின் போது ஏழு நபர்கள் வேலை பார்த்து வந்தனர். அவர்கள் தங்குவதற்கு நான் தனியாக இடம் ஏற்பாடு செய்துள்ளேன். இவ்வழக்கு சம்வத்தில் இறந்துபோன விஜயராகவன் என்னிடம் தான் நான்கு வருடங்களாக வேலை செய்தார். இறந்து போன விஜயராகவன் திருவாரூர் மாவட்டம் தென்பாதி கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். விஜயராகவன் என்னிடம் வேலை பார்த்தபோது திருமண சம்பந்தமாக அடிக்கடி லீவு போடுவார். அவரது மனைவி மலேசியாவிலிருந்து வருவார். விஜயராகவனை அவரது மனைவி என்று சொல்லி ஒருவர் வந்து அழைத்து செல்வார். விஜயராகவனுக்கும் அந்த பெண்ணுக்கும் எப்படி கல்யாணம் ஆனது என்று விஜயராகவன் என்னிடம் சொல்லவில்லை. விஜயராகவன்**

கடைசியாக 2018ம் வருடம் 5வது மாதத்தில் என்னிடம் வேலை பார்த்தார். கடைசியாக நான் மனைவி என்ற சொன்ன அந்த பெண்மணி விஜயராகவனை மஞ்சக் கலர் டூவீலரில் அழைத்து சென்றார். அதன் பிறகு விஜயராகவன் எனது கடைக்கு வேலைக்கு வரவில்லை. அதன் பின்னர் மூன்று நாட்கள் விஜயராகவன் வீட்டில் இருந்து அவரது அம்மாவும் மச்சானும் வந்து என்னிடம் விஜயராகவனை பற்றி கேட்டார்கள். நான் அவர்களிடம் போலீசில் கம்ப்ளெயிண்ட் கொடுக்குமாறு சொன்னேன். விஜயராகவன் அடிக்கடி வீவு போட்டதால் இடைப்பட்ட காலத்தில் நான் அவரை பற்றி விசாரிக்கவில்லை. இது சம்பந்தமாக என்னை ராயபுரம் போலீசார் திருச்சிக்கு வந்து விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (1 முதல் 3 வது தரப்பு)

நான் தற்போது சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன்.

4வது எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியானது என ஒப்புக் கொண்டதின் பேரில் 07.11.2022 அன்று சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.

23வது கூடுதல் மாவட்ட நீதிபதிஅவர்கள்,
23வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் .
அல்லிக்குளம், சென்னை–3.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

.....

XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 10

**S.C. No:39/2021**

| | | |
|---|---|---|
| Ranking of Witness | .. | PW -12 |
| Name | .. | Kamala |
| Father Name | .. | |
| Village | .. | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of November 2022 .

-----------------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை</u>

**நான் திருச்சி, பீமநகரில் பூ வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.11 சேகர் எனது கணவர் ஆவார். இறந்து போன நபர் எங்களது கடையில் சுமார் 4 வருடங்களாக வேலை பார்த்து வந்தார். அந்த நபரை எங்களது கடையில் வேலை பார்த்த போது போஸ் என கூப்பிடுவார்கள். அவர் சொந்த ஊர் மன்னார்குடி பக்கத்தில் உள்ள தென்பாதி ஆகும். அந்த வேலை பார்த்த நபர் சரிவர வேலைக்கு வரமாட்டார். எங்களது கடையில் ஏழு பேர் வேலை பார்த்தனர். சம்பவத்தின்போது இறந்து போன நபரும் மற்றவர்களும் எங்களது பூக்கடையிலேயே தங்கி இருந்தனர். அவர் ஏன் அடிக்கடி லீவு போடுகிறார் என கொஞ்ச நாள் கழித்து நாங்கள்விசாரித்தபோது அவரது மனைவி வந்து**

**அடிக்கடி கூப்பிடுவதாக சொன்னார். அவர்களுக்கு சமயபுரம் கோவிலில் கல்யாணம் நடந்ததாக சொன்னார். அந்த நபர் எங்களது பூக்கடையில் கடந்த 2018ம் வருடம் மே மாதம் வரை கடைசியாக வேலை பார்த்தார். அவர் எங்களது கடையில் இருந்து கடைசியாக மதியம் 01.30 மணி அளவில் அவரது மனைவியுடன் ஆரஞ்சு கலர் பைக்கில் சென்றார். அவருடன் இன்னொரு பெண்மணியும் இருந்தார். அதன் பிறகு அந்த நபர் தங்களது கடைக்க திரும்ப வரவில்லை. இது சம்பந்தமாக அவரது அம்மா வந்து எனது வீட்டுக்காரரிடம் எனது பையன் போன் பன்னுவார் அவ்வாறு பண்ணவில்லை என சொல்லி விசாரித்தார். நாங்கள் அவர் எங்கு போயிருக்கிறார் என்று தெரியவில்லை என சொல்லிவிட்டோம். பத்து நாட்கள் கழித்து அந்த பையனின் அம்மாவும், மச்சானும் வந்து போலிசில் புகார் தெரிவிப்பதாக சொன்னார்கள்.அதற்கு நாங்கள் சரி என்று சொன்னோம். கம்ப்ளெயிண்ட் கொடுக்க நாங்கள் செல்லவில்லை. மெட்ராஸ் ராயபுரத்தில் இருந்து போலிசார் எங்களை அந்த பையன் காணாமல் போனது பற்றி விசாரித்தனர்.**

<u>குறுக்கு விசாரணை (1 முதல் 3 வது தரப்பு )</u>

**நான் தற்போது சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன்.**

**4வது எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியானது என ஒப்புக் கொண்டதின் பேரில் 07.11.2022 அன்று சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.

23வது கூடுதல் மாவட்ட நீதிபதிஅவர்கள்
23வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம் .
அல்லிக்குளம், சென்னை—3.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

.....

XXIII Additional Sessions Court, City Civil Court, Chennai 104

**S.C. No:39/2021**

| | | |
|---|---|---|
| Ranking of Witness | .. | PW - 13 |
| Name | .. | Murugesan |
| Father Name | .. | |
| Village | .. | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of NOvember 2022 .

---------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை

**எனக்கு பட்டுக்கோட்டை வளவன்புரம் சொந்த ஊர் ஆகும். நான் திருச்சி பீமநகரில் சாட்சி சேகர் கடையில் பூ கட்டும் வேலை செய்தேன். இவ்வழக்கில் இறந்துபோன விஜயராகவன் என்னுடன் பூ கட்டும் வேலை செய்ததால் எனக்கு தெரியும். என்னுடன் சரவணன் மற்றும் செல்வராஜ் ஆகியோரும் வேலை பார்த்தனர். விஜயராகவன் வேலையில்இருந்தபோது அவரது மனைவி வந்ததாக சொல்லி அடிக்கடி லீவில் சென்று விடுவார்.**

அவரதுமனைவி மலேசியாவில் இருப்பதாகவும் அடிக்கடி திருச்சிக்கு வந்து தன்னை பார்த்து செல்வதாகவும் விஜயராகவன் சொன்னார். அவரது மனைவி வந்தால் விஜயராகவன் அதிகமாக ஒருவாரமும் இரண்டு நாட்கள் மூன்று நாட்கள் என லீவு போடுவார். விஜயராகவன் அவருக்கு அவரது சித்தப்பா மகன் மாதவன் முன்னிலையில் சமயபுரம் மாரியம்மன் கோவிலில் கல்யாணம் நடந்ததாக சொன்னார். விஜயராகவன்

2018ம் வருடம் 5வது மாதம் கடைசியாக வேலைக்கு வந்தார். கடைசியாக விஜயராகவனின் மனைவியும் இன்னொரு பெண்ணும் ஆரஞ்சு கலர் டூவிலரில் மதியம் சுமார் 01.30 மணி அளவில் கூட்டிச் சென்றனர். அதன்பிறகு விஜயராகவனை நான் பார்க்கவில்லை. ஒருவாரம் பத்து நாள் கழத்து விஜயராகவனின் அம்மா என் பையன் போன் அடிக்கவில்லை என சாட்சி சேகரிடம் கடைக்கு வந்து விசாரித்தார். சேகர் அதற்கு போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கொடுங்கள் என்றுசொன்னார். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (1 முதல் 3 வது தரப்பு )</u>

நான் தற்போது சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன்.

4வது எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியானது என ஒப்புக் கொண்டதின் பேரில் 07.11.2022 அன்று சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டது.

23வது கூடுதல் மாவட்ட நீதிபதிஅவர்கள்